# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - **16.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)

## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 13903/SCIC/2023**

திரு.M.முனிராஜ் த/பெ.மரியப்பா
எண்.3/225, நவதி கிராமம் மேல்முறையீட்டாளர்
மத்திகிரி அஞ்சல்
ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 29.05.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 01.07.2023 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 02.08.2023 |
| 4. | ஆணையத்தின் அறிவிப்பு | 31.10.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 30.10.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 29.01.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஓசூர் வட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறுகோரியுள்ளார், "கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், ரங்கோபண்டித அக்ரஹாரம் சர்வே எண்.34/5, 34/6, 34/7, 34/8, 34/9 எனது தாயாரான திருமதி.ராமக்கா

க/பெ.மரியப்பா அவர்களின் பெயரில் தமிழ்நாடு நில சீர்திருத்தம் (பிரிவு) விதிகள் 1965-ன்படி பட்டா எண்.9 நாள் 23/05/1997 வழங்கிய பட்டாவை 2011-ல் சர்வே எண்.34/5, 34/6, 34/7, 34/8 ஆகிய நான்கு சர்வே எண்கள் பட்டா எண்.9-ல் இருந்து நீக்கப்பட்டுள்ளது. மேற்படி நான்கு சர்வே எண்கள் நீக்கப்பட்டதற்கு வட்டாட்சியர் கையாண்ட அலுவலக கோப்பின் அனைத்து பக்கங்களின் சான்றிட்ட ஒளி நகல்களையும் அலுவலக குறிப்பு கட்டுடன் கிராம நிர்வாக அலுவலரின் அலுவலக பதிவேட்டின் மேற்படி பட்டா ரத்து சம்பந்தமான பதிவுகள் பதியப்பட்டுள்ள பக்கங்களின் சான்றிட்ட ஒளி நகல்களையும் வழங்கிடுக" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (16/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.ரா. விஜி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஓசூர் வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் ஆஜராகி மனுதாரரின் 29/05/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு 28/06/2023 தேதியிட்டு தகவல்களையும், நகல்களையும் அனுப்பியுள்ளதாகவும், மீண்டும் 30/10/2024 தேதியிட்டும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, அதன் நகல்களையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 29/01/2025 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

3. இன்றைய விசாரணையின் போது, மனுதாரர், தான் கோரியவாறு ஆவணங்களின் நகல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையிலான பட்டா மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றும் நிலச் சீர்திருத்த கோப்புகள் அனைத்தும் சார் ஆட்சியரின் அலுவலகத்தில் பராமரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். மனுதாரரின் மனுவை 5 தினங்களுக்குள் பிரிவு 6(3)-ன் கீழ், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மாற்றம் செய்து அனுப்பவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியவாறான ஆவணங்களின் நகல்களை சார் ஆட்சியர், ஓசூர் அலுவலகத்திலிருந்து பெற்று, அதனை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலினை 31/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

4. மேலும், ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 01/07/2023 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய (01/07/2023 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் திரு.சுப்ரமணி, (தற்போது) தனி வட்டாட்சியர், அலியாளம், சூளகிரி வட்டம் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன காரண விளக்கத்தைப் பெற்று அதனை 31/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

## <u>வழக்கு எண். SA 13903/SCIC/2023</u>

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

2.திரு.சுப்ரமணி,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
(தற்போது) தனி வட்டாட்சியர்,
அலியாளம், சூளகிரி வட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு.M.முனிராஜ் த/பெ.மரியப்பா
எண்.3/225, நவதி கிராமம்
மத்திகிரி அஞ்சல்
ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

நகல்.
1.மாவட்ட ஆட்சித் தலைவர்.
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC